செய்தி வெளியீடு எண் : 1169 நாள் : 13.06.2023

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் (**TNUSRB SUB–INSPECTOR – 2023**) பட்டதாரி கல்வித்தகுதியில் காவல் சார்பு ஆய்வாளர் (தாலுகா, ஆயுதப்படை, தமிழ்நாடு சிறப்பு காவல் படை) உள்ளிட்ட 621 பணிக்காலியிடங்களுக்கான தேர்வு அறிவிக்கை 05.05.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது. கல்வித்தகுதி ஏதாவது ஒரு பட்டப்படிப்பு வயது வரம்பு 01.07.2023 அன்று O/C – 20–30, BC, MBC, BCM–20–32, SC/ST/SCA –20–35 க்குள். விண்ணப்பிக்க கடைசி நாள்: 30.06.2023. விண்ணப்பிக்க வேண்டிய இணையதள முகவரி https://www.tnusrb.tn.gov.in ஆகும்.

இதற்கான இலவச பயிற்சி வகுப்பு சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டத்தில், **29.05.2023** அன்று துவங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி வகுப்பிற்கு சேர, விருப்பமும் (ம) தகுதியுமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது **ஆதார் அட்டை நகல் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன்** சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தில் நேரடியாக கலந்து கொள்ளலாம். இப்பணிகாலியிட தேர்வு தொடர்பான விவரங்களுக்கு, https://www.tnusrb.tn.gov.in என்ற இணையதள முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு, இவ்வலுவலக தொலைபேசி எண்கள் வழியே **7811863916** (ம) **9499966026** தொடர்பு கொள்ளலாம் என வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் **திரு. கொ. வீர ராகவ ராவ் இ.ஆ.ப.,** அவர்களால் அறிவிக்கப்படுகிறது.

ஆணையர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in